[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், கிராமப்புறங்களிலும், எல்லா குக்கிராமங்களிலும் வசிப்பவர்களுக்கு மருத்துவ சேவையை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே, முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், முன்னோடி மாநிலமாகவும், மற்ற மாநிலங்கள் எல்லாம் வியக்கக்கூடிய, பாராட்டக்கூடிய, போற்றக்கூடிய, உலக சுகாதார நிறுவனம் பாராட்டக்கூடிய அளவிற்கு தமிழகத்தில் மருத்துவ சேவையை, மகத்தான சேவையாக மாற்றிய பெருமை நம்முடைய மாபெரும் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியில் உள்ள மக்கள்தொகையைக் குறிப்பிட்டு, தனது கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். கொடிக்குளம் மற்றும் இராமச்சந்திராபுரம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கிடையே எட்டு கிலோ மீட்டர் தூரத்தில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, அவர் வலியுறுத்தியதன்பேரில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வருங்காலத்தில், நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 292 முதல் 296 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.